ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | தமிழ் இலக்கிய நயம் | நேரம் : 3 மணி. |
|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

- **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இன் முதலாம் வினாவுக்கும், ஏனைய 2, 3, 4, 5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## வினாத்தாள் I

1) **I தொடக்கம் V வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

I. "செஞ்சிலை மாரனும் கலகமே செயும் கண் இதுவாம் என மலரம்புகள் ஐந்தையும் வைத்து வணங்கினான்"

(அ). செஞ்சிலை மாரன் யார்?

..............................................................................................................................

(ஆ). மலரம்புகள் ஐந்தும் எவை?

..............................................................................................................................

II. "மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்..."

(அ). இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

..............................................................................................................................

(ஆ). மதுசூதன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

..............................................................................................................................

III. "இது வேக வைக்காததென்றாலும் எனக்கொரு விந்தை உருசியையா..."

(அ). இப்பாடலின் ஆசிரியர் யார்?

..............................................................................................................................

(ஆ). இவ்வரிகளின் நயத்தினை எழுதுக.

..............................................................................................................................

..............................................................................................................................

IV. "கஞ்சி குடியென்றான் களித்தின்று போவென்றேன் வஞ்சியரே சென்றான் மறைந்து..."

(அ). "கஞ்சி குடி" இருபொருளையும் எழுதுக.

..............................................................................................................................

(ஆ). இங்கு கையாளப்பட்டுள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

..............................................................................................................................

V. "கருங்கயல் கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின் கணவன் திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி"

(அ). இங்கு "நின் கணவன்" எனச் சுட்டப்படுகின்றவன் யார்?

..............................................................................................................................

(ஆ). இவ்வரிகள் உணர்த்தும் செய்தி யாது?

..............................................................................................................................

(5x4=20 புள்ளிகள்)

2) **கீழ்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுற் பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.**

அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்கு தரமுயல்வதுதான் "ஹைக்கூ". உண்மையில் கலை, இலக்கியம் அனைத்தினதும் நோக்கும் இதுதான். கவிஞனோ, கலைஞனோ, ஓவியனோ தனக்குக் கிடைக்கும் அனுபவத்தை அப்படியே உணர்வு இழை அறுந்திடாதவாறு தன் சிருஷ்டியைப் பின்னி வாசகருக்குப் பரிசளிக்கின்றான். வாசகர்கள் தமது அனுபவ வெளியுடன் இணைந்து இரசித்து இன்புறுகின்றார்கள் அல்லது துயருறுகின்றார்கள். ஒரு கணப்பொழுதின் மகிழ்வை அல்லது துயரைப் பகிர்கிறது ஹைக்கூ. கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது கிளர்த்தும் சிந்தனைகளும், சம்பாசணைகளும், எதிர்வினைகளும், கேள்விகளும் அதிகம் வாசக மனசுக்குள் அலை எழுப்பும். அதனால்தான் ஹைக்கூ காந்தம் போல் இழுக்கும் மொழி நடையும், பிரபஞ்சத்தின் அந்தரங்களைக் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வையும் கொண்டுள்ளது எனலாம்.

01. கலை இலக்கியத்தின் நோக்கு எதுவாக அமைய வேண்டும் என கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

(04 புள்ளிகள்)

02. சிருஷ்டிகர்த்தாக்களின் சிருஷ்டிப்புகளின் சிறப்பினை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

(04 புள்ளிகள்)

03. ஹைக்கூ அளவில் சிறியதாக இருந்தாலும் அது மனித மன உணர்வுகளில் ஏற்படுத்தும் தாக்கம் அதிகம் என்பதை ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகின்றார்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(06 புள்ளிகள்)

04. ஹைக்கூவின் மொழி நடைக்கனதி, ஈர்ப்பு தொடர்பாக ஆசிரியரின் கூற்றுக்கு உமது கருத்தினை எழுதுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(06 புள்ளிகள்)

(மொத்தம் - 20 புள்ளிகள்)

**அல்லது**

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
        தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான் அதைச் சம்பு வின்கனி என்று
        தடங்கையில்  எடுத்து முன்பார்த்தாள்
வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி
        மலர்க்கரம் குவியுமென்று ஆஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
        புதுமையோ இது எனப் புகன்றான்.

01. வண்டு - சம்புவின் கனி என தலைவி எண்ணுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் எவை?

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

(04 புள்ளிகள்)

02. வண்டு அஞ்சியதன் காரணம் யாதென கவிஞர் கூறுகின்றார்?

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

(04 புள்ளிகள்)

03. தலைவியின் அழகு சுட்டப்பட்டுள்ள விதத்தினை எழுதுக.

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

(06 புள்ளிகள்)

04. தலைவியினதும், வண்டினதும் அறியாமையை ஆசிரியர் எடுத்துக்காட்டும் விதத்தினை விளக்குக.

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

(06 புள்ளிகள்)

(மொத்தம் - 20 புள்ளிகள்)

## வினாத்தாள் II

**கவனிக்க:**

- **முதலாம் வினாவுக்கும், ஏனைய 2, 3, 4, 5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

1) **பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள தொடர்களின்/வழிகாட்டல் குறிப்புகளின் அடிப்படையில் பாடலை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.**

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்
அரிசிப்பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலை நாடும் கண்டீரோ தம்பி
நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி
மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி
மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி
உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி
இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி
உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உப்பு மலை நாடும் கண்டீரோ தம்பி
காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி
வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி
வேந்தர் மணி முடியும் கண்டீரோ தம்பி
கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ
பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ
குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ
ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க

(அ). இப்பாடல் எழுந்த பின்னணி
(ஆ). மருத்துவிச்சியின் நோக்கம்
(இ). மருத்துவிச்சி குழந்தையின் மூலம் எதிர்பார்ப்பவை
(ஈ). குழந்தைக்கும் - சமூகத்திற்கும் இடையேயான தொடர்பு
(உ). இப்பாடலின் கவித்துவம் (5x4=20 புள்ளிகள்)

2) **புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் என்ற கவிதையில்,**

   i. மலையகப் பெண்கள் படும் துன்பம்,

   ii. மலையகப் பெண்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடத் துடிக்கும் விதம்

   என்பவற்றை விபரிக்குக. (15 புள்ளிகள்)

3) **தீவு மனிதன் சிறுகதையில்**,

   i. கதைத் தலைப்பின் பொருத்தப்பாடு

   ii. கதை சொல்லியின் தனிமை

   என்பன சித்தரிக்கப்படும் விதத்தினை விளக்குக. (15 புள்ளிகள்)

4) **'இனிது' என்ற பாடத்தில் 'முளிதயிர் பிசைந்த காந்தள்' என்ற பாடலில்,**

   i. தலைவி தலைவன் மேல் கொண்ட கரிசனை

   ii. தலைவியின் மகிழ்ச்சி

   என்பவற்றை எடுத்துரைக்க. (15 புள்ளிகள்)

5) **நலம் புனைந்து உரைத்தல் பகுதியில்,**

   i. தலைவியின் மென்மை பற்றித் தலைவனின் எடுத்துரைப்பு

   ii. தலைவியின் கண்ணழகு வெளிப்படுத்தப்படும் விதம்

   என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

LOL.lk
Learn Ordinary Level

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

## පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර



• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams

සමනල දැනුම

Knowledge Bank Publications

විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank

Master Guide

WWW.LOL.LK

CASH ON DELIVERY

HOME DELIVERY

Whatsapp contact
+94 71 777 4440

Website
www.lol.lk

Order via WhatsApp

# 071 777 4440